*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
*CC.No.318/2021 – P.W.5 (LW2)*

| | |
|---|---|
| *Name* | வீரவர்மன் |
| *Father/Husband's Name* | குப்புசாமி |
| *Village* | வடுவூர் வடபாதி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 45 |

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.02.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் வடுவூர்வடபாதியில் வசித்து திருவாரூர் ONGC யில் பாதுகாவலராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சண்முகம் என்பவரை எனக்கு தெரியும். அவர் விபத்தில் இறக்கும்போது நான் செக்யூரிட்டியாக பணியிலிருந்தேன். அ.சா.1 திருநாவுக்கரசு என்பவரை தெரியும்.

2. கடந்த 07.09.2020 ம் தேதியன்று இரவு 07.00 மணியளவில் கம்மங்குடி ஆர்ச்சிலிருந்து பனையூர் ரோட்டில் உள்ள ONGC குவாட்டர்ஸில் நான் பாதுகாப்பு பணியிலிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி டிவிஎஸ். ஸ்டார்சிட்டி பதிவெண். TN51-C-9505 என்ற வாகனத்தை சண்முகம் என்பவர் ஓட்ட பின்னால் திருநாவுக்கரசு என்பவர் அமர்ந்திருந்தார். எதிர்திசையிலிருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த வெள்ளை நிற அம்பாசிடர் TMR8008 காரை அதி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்சொன்ன இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர்களின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். மேற்படி காரை ஓட்டி விபத்தினை ஏற்படுத்தியவர் பெயர் குமார் என்று பின்னர் விசாரித்து தெரிந்துக்கொண்டேன்.

3. நான் சண்முகத்தை பார்த்தபோது அவருக்கு வலது பக்க இடுப்பு, தொடை, முழங்கால் மற்றும் முழங்காலின் கீழ்பகுதி, வலது கணுக்காலுக்கு கீழ்புறம் எலும்பு

முறிவு ஏற்பட்டிருந்தது. திருநாவுக்கரசு என்பவருக்கு வலது முழங்காலிலும், வலது முழங்காலின் கீழ்பகுதியில் எலும்பு முறிவும், வலது முன்னங்காலில் இரத்தக்காயமும் இருந்தது.

4. மேற்படி காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் - முடியும்.

(**எதிரியை அடையாளம் காட்ட வேண்டி அரசுத்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**).

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.